# வேதாந்த தீபிகை.

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

(ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ஸபையாரால் ப்ரசுரிக்கப்படுகிறது)

1927—28

ப்ரபவ—விபவ.

[ஸப்புடம்—18.]

பத்ராதிபர் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் பீ. ஏ., எல். டி.


சென்னை.
சுதேசமித்ரன் பிராஞ்ச் ப்ரஸ்
1928,

ஸ்ரீ உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 155
ஸ்ரீ வை. ஸி. ஸபையின் வார்ஷிகமஹா ஸங்கம் 156, 211, 234
ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை 259, 283, 311
ஸ்ரீ வைஷ்ணவ வித்வத்ஸபை 260
ஸ்ரீ பாஷ்ய விமர்சந பரீக்ஷா 352
ஹிந்து மத விவாஹச் சீர்திருத்த பர்யாலோசனை 119, 186
ஹிந்து முஸல்மன் விவாஹம் 314
மங்கைமன்னன் மறம் 272, 295
மதவிசாரம் 283
மநுஸ்ம்ருதி 109, 133
மோக்ஷம் 199
விவாஹவயது மசோதா 151,279
ஸ்ரீ பகவத்ராமாநுஜ ப்ராஷ்யமும் மோக்ஷ ஸ்வரூபமும் 189
ஸ்ரீ பகவத்கீதையின் மஹிமையும் அதன் பரமதாத்பர்யமும் 1,43
ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை 261

ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் உபந்யாஸங்கள்:— அர்ச்சாவதார வைபவமும்
உபநிஷத்துக்களின் பெருமையும் 81

ஆஸ்திக்யம் 113
ஸ்த்ரீ தர்மம் 73
கர்மாநுஷ்டாநம் 77
மோக்ஷோபாயம் 146
ஸ்ரீ வை. ஸி. ஸபையின் 17-வது ரிபோர்ட்டு அறிக்கை 202
ஷை ஸபையின் 18-வது வார்ஷிக மஹாஸங்கத்தின் ஸ்வாகத பத்ரிகையும்
உபந்யாஸ விஷயங்களும் 209,210
மதுராந்தகத்தில் நடந்த ஸபை விவரம். 227
ஸபையின் தீர்மானங்கள் 231
ஷை நிர்வாஹக் கூட்டம் 232
வித்வத் ஸம்மாநம் 233
ஸம்சயோச்சேதிநீ ஸமர்த்தநம் 223
ஹிந்து விவாஹ ரத்து மசோதா 260
ஹிந்து விதவைகள் தலைமயிரை நீக்கவேண்டுமோ? 335

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மவுண்ட்ரோட், சென்னை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] ப்ரபவஹு, ஐப்பிசிமீ [ஸஞ்சிகை 1

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

## ஸ்ரீ பகவத்கீதையின் மகிமையும் அதன் பரம தாத்பர்யமும்.

(ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சினாப்பள்ளி.)

உலகின்கண் ஸுகதுக்கங்களுக்கு ஸாதநங்களாக இருக்கிற புண்ய பாபங்கள் விளையும் க்ஷேத்ரமாக விளங்கிவருகின்ற இம்மண்ணுலகில், ஆத்யாத்மிகம் முதலிய தாபங்களால் வருந்தும் பிராணிகளைக் கண்ணுற்று அவைகள் அத்துயரத்தினின்று அகன்று ஸுகத்தை அடைவதற்கு ஹேதுக்களாக இருக்கிற பற்பல மார்க்கங்களை, நூற்றுக்கணக்கான தாய்தந்தையரைவிட அதிக வாத்ஸல்யமுள்ள சுருதியானது நன்கு விளக்கிக் காட்டி, அந்தந்த அதிகாரிகளை அந்தந்த வழிகளில் இழியச் செய்து, ஐஹிக ஸம்ருத்திகளையும் ஆமுஷ்மிக ஸுகாநுபவ ஸ்தாநமான ஸ்வர்க்கத்தையும் கைவல்யமென்கிற பரிமித ஸுகப்ரதமான ப்ரத்யகாத்மாநுபவத்தையும் அபரிமித ஸுகரூபமான அகண்ட பரிபூர்ண ப்ரம்மாநந்தாநுபவத்தையும் அறிந்து, காமதேனுபோல் எல்லா அபீஷ்டங்களையும் வர்

ஷித்து, எக்காலத்திலும் உயிர்களைப் பாதுகாத்து வருகிறதென்கிற விஷயம் எல்லோர்க்கும் தெரிந்ததே. அத்தகைய வேதத்திலுள்ள அர்த்த ஸம்சயங் களைத் தீர்ப்பதற்கு உரித்தாயுள்ளவை அதற்கு உபப்ரும்ஹண ரூபமாக இருக்கிற இதிஹாஸம் புராணம் இவ்விரண்டேதான். அவற்றுள் சிறப்பு வாய்ந்திருப்பதால் புராணத்தைவிட இதிஹாஸமே முக்யமான வேதோப ப்ரும்ஹணமாக அபிஜ்ஞர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களை யும், புராதநர்களான புண்ய புருஷர்களுடைய திவ்ய சரித்ரங்களையும், புண்யகதைகளையும் ஸவிஸ்தாரமாக எது எடுத்து உரைக்குமோ அதுதான் இதிஹாஸமென்று வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட இதிஹாஸங்களுக்குள் ப்ரஸித்தமானவை ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீ மஹாபாரதம் இவ்விரண்டே யாம். இவ்விரண்டினுள் ஸ்ரீமத் ராமாயணம் சிறியது; பாரதமோவெனில், லக்ஷத்து இருபத்தையாயிரம் ச்லோகங்களுடன் கூடி இருப்பதுடன், அர்த்த கௌரவமுள்ளதாக இருப்பதாலும் மிகப் பெரியது. சப்தார்த்தங் களுடைய கௌரவத்தாலும் தர்ம ப்ரவசநங்களாலும் நீதிகளாலும் நிறைந் திருப்பது பற்றி மஹாபாரதமென மஹத் சப்தத்தால் விசேஷிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இது வேதம்போல் எல்லா புருஷார்த்த ஸாதநங்களையும் துலக்கிக் காட்டுவதுடன், நிச்ரேயஸ ஸாதநங்களான நிவ்ருத்தி தர்மங்களையும் ப்ரதி பாதிப்பதால் ஐந்தாவது வேதமெனப்படுகிறது. இது ஸ்ரீ வியாஸ மஹர்ஷியினால் பரம க்ருபையுடன் உலகம் உய்யுமாறு நன்கு அநுக்ரஹிக்கப் பட்டிருப்பதால் கார்ஷ்ண வேதமென்று வழங்கப்படுகிறது. வேதவியாஸ ருக்கு க்ருஷ்ணர் என்று நாமதேயமுண்டு. இத்தகைய மகிமை வாய்ந்த மஹா பாரதத்திலடங்கியிருக்கிற பீஷ்ம பர்வத்தில் இருபத்தைந்தாவது அத்யாயம் தொடங்கி நாற்பத்திரண்டாவது அத்யாயம் வரையிலுள்ள பதினெட்டு அத்யாயங்கள் பகவத் கீதாத்யாயங்கள். பதினெட்டு பர்வங் களுக்குள் ஒன்றாகிய பீஷ்ம பர்வத்திலடங்கியிருக்கிற இந்தப் பகவத் கீதை ஒன்றே ஸாரதமமானது. பக்தாக்ரகண்யனான அர்ஜுநனை வ்யாஜமாகக் கொண்டு ஜகதுஜ்ஜீவநார்த்தமாகப் பகவானான ஸ்ரீ கண்ணபிரானால் உபதேசிக் கப்பட்டிருப்பதால் இதற்குப் பகவத்கீதை என்று பெயர் ஏற்பட்டது. உப நிஷத் ஸமாதி ஸித்தமான வ்யவஹார நிரூடியினால் கீதா சப்தம் ஸ்த்ரீ லிங்கத்தினால் நிர்தேசிக்கப்பட்டிருக்கிறது. தத்வ ஹிதங்களை உள்ள படி உரைத்து, எல்லோரையும் நல்வழியில் நடைபெறச் செய்து, ஐஹிகா முஷ்மிக ஸுகங்களை அடையும்படி ப்ராணிவர்க்கங்களை உத்தேசித்து ஆஜ்ஞை யிடுவதால் இந்தக் கீதையானது சாஸ்த்ரமென்று பகரப்படுகிறது. சாஸநம்

செய்வதால் இது சாஸ்த்ரம். தத்வ ஹிதங்களை உரைத்து ப்ராணிகளை பரம புருஷார்த்த லாபத்தை அடையத்தகுந்த வழியில் நடத்துவதில் முக்ய மான கருத்துள்ளதாக இருப்பதால் இந்தக் கீதாசாஸ்த்ரம் மற்ற எல்லா சாஸ்த்ரங்களையும் விட மேன்மை வாய்ந்துள்ளது. இதன்பெருமை மஹா பாரதத்தில் மஹர்ஷியினாலேயே உரைக்கப்பட்டிருக்கிறது. "ஸுக்ஷ்மாவ நிஷ்டம் வாண்யாம் க்ருஷ்ணவைபாயநோ வ்யலீகல" என்று அபியுக்தர்களும் கூறி யிருக்கின்றனர். "யஸ்மிந் ப்ரஸாத ஸுமுகெ கவயோபியெதெ ஶாஸ்த்ராண்ய ஶாஸ்த்ரமிஹ தாஹிராஸுயாணி । க்ருஷ்ணேந தேந யதிஹ ஸ்வயமேவ கீதம் ஶாஸ்த்ரஸ்ய தஸ்யஸத்ருஶம் கிமிவாஸ்தி ஶாஸ்த்ரம்" என்று ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதத்தில் இந்தக் கீதா சாஸ்த்ரத்திற்கே ப்ரா தாந்யத்தை மஹநீயர்கள் கூறுகின்றனர். 'ஸாரதெ ஹமவஜீதா யஸு ஶாஸ்த்ரேஷு ஸாநவம் । வெதேஷு வளாஸ்ஷம் ஸூக்தம் வாஶாணேஷு அ வைஷ்ணவம் ॥' என்று மஹா பாரதத்திலுள்ள பீஷ்ம பர்வத்தில் நாற்பத்து மூன்றுவது அத்யாயத்தில் இந்தக் கீதையின் பெருமையைப் பற்றி மஹரிஷியே வ்யக்தமாகக் கூறி இருக்கிறார். அதாவது 'கீதா ஸு கீதா கர்தவ்யா கிமந்யை ஶாஸ்த்ரஸங்க்ரஹை: । யா ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத்விநிஸ்ஸ்ருதா । ஸர்வஶாஸ்த்ரமயீ கீதா ஸர்வதேவமயோ ஹரி: । ஸர்வதீர்த்தமயீ கங்கா ஸர்வவேதமயோ மநு: । கீதா கங்கா ச காயத்ரீ கோவிந்தேதி ஹ்ருதிஸ்திதே । சதுர்ககார ஸம்யுக்தே புநர்ஜந்ம ந வித்யதே । ஷட்ஶதாநி ஸவிம்ஶாநி ஶ்லோகாநாம் ப்ராஹ கேஶவ: । அர்ஜுந: ஸப்தபஞ்சாஶத் ஸப்தஷஷ்டிம் து ஸஞ்ஜய: । த்ருதராஷ்ட்ர: ஶ்லோக மேகம் கீதாயா மாந முச்யதே । பாரதாம்ருதஸர்வஸ்வ க்ருஷ்ணேந மதிதஸ்ய மதுவேவ ஹ்ருதம் ।'

இவற்றின் பொருள்:—கீதா சாஸ்த்ரம் ஒன்றே நன்றாகக் கற்கத் தக்கது. கூட்டம் கூட்டமாக இருக்கிற மற்ற சாஸ்த்ரங்களால் யாது பயன்? இந்தக் கீதையானது பத்மநாபனான ஸ்ரீ கண்ணனுடைய முகாரவிந்தத்தி னின்று மது தாரைபோல் தானாகப் பெருகிவந்தது. ஹரியானவர் எவ்வாறு ஸர்வ தேவதா ஸ்வரூபியோ, கங்கையானது எவ்வாறு ஸர்வ தீர்த்த ஸ்வரூபி ணியோ, காயத்ரீ மந்த்ரம் எவ்வாறு ஸர்வ வேதமயமோ அவ்வாறே இந்தக் கீதையானது ஸர்வசாஸ்த்ர ஸ்வரூபிணியாய் விளங்குகிறது. கீதை கங்கை காயத்ரீ கோவிந்தன் என்று 'க'காரத்தில் தொடங்கப்பட்டிருக்கிற இந்த நான்கு பதங்கள் எவன் உள்ளத்தில் குடிகொண் டிருக்குமோ அவ னுக்கு மறுபடி ஸம்ஸாரபந்தம் கிடையாது. இந்தக் கீதாசாஸ்த்ரத்

தில் ஸ்ரீகேசவன் அறுநூற்று இருபது சுலோகங்களை அருளிச்செய்தார். அர்ஜுனன் ஐம்பத்தேழு சுலோகங்களையும் ஸஞ்ஜயர் அறுபத்தேழு சுலோகங்களையும் த்ருதராஷ்டரர் ஒரு சுலோகத்தையும் பகன்றனர். ஸ்ரீகண்ணபிரான் பாரதமாகிற ஸமுத்ரத்தைத் தன் புத்தியாகிற மந்தர கிரியினால் கடைந்து, கீதையாகிற அம்ருதத்தை எடுத்து, அர்ஜுனனுடைய காதுகளாகிற அஞ்ஜலியினால் பருகச்செய்தார் என்று. இது பதினெட்டு அத்யாயங்களுள்ளது. ஆறு ஆறு அத்யாயங்களடங்கிய ஒரு க்ரந்த ஸந்தர்ப்பத்தை ஒரு ஷட்கமாகப் பகுத்து இந்த க்ரந்தம் முழுமையுமே மூன்று ஷட்கமாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாத்யன் ஸ்ரீமந் நாராயணன் என்பதை ‘ஸ்வதர்ம ஜ்ஞானவைராக்ய ஸாத்யபக்த்யேக கோசர: । நாராயண: பரம் ப்ரஹ்ம கீதாசாஸ்த்ரே ஸமீரித: ।’ என்கிற சுலோகத்தால் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தார். இதன் பொருள்:—தத்தம் வர்ணாச்ரமங்களுக்கு உரித்தாக இருக்கிற தர்மங்கள் ஸ்வதர்மங்களாகும். பரசேஷதைகரஸனாக இருக்கிற ஜீவாத்மாவை உள்ளபடி அறிதல் ஜ்ஞானம்; பரமாத்மாவைத் தவிர்த்த மற்ற வஸ்துக்களில் பற்று தலற்றிருத்தல் வைராக்யம். இந்த ஸ்வதர்மங்களாலும் ஜ்ஞானத்தாலும் வைராக்யத்தாலும் ஸாத்யமான பக்தி ஒன்றுக்கே கோசரனான பரப்ரஹ்ம ஸ்வரூபியான ஸ்ரீமந் நாராயணன் கீதா சாஸ்த்ரத்தில் நன்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறார். வைராக்யமானது கர்மயோகத்துக்குப் பரிகரமாக இருப்பதால் கர்மயோக பர்யாயமாக இருக்கிற ஸ்வகர்மத்தினாலேயே இந்த வைராக்யமும் சொல்லப்பட்டு விட்டபடியால் மீண்டும் தனித்து வைராக்யத்தை எடுத்தது, ‘வைராக்யம் உண்டானால் மோக்ஷமுண்டு, அதில்லாவிடில் மோக்ஷம் இல்லை’ என்றிருப்பதுபற்றி மோக்ஷ விஷயத்தில் இதற்கு ப்ராதாந்யத்தை ஜ்ஞாபிப்பதற்காக. இந்தக் கீதா சாஸ்த்ரம் முழுவதும் பக்தியை ப்ரதிபாதிக்கிறது. கர்மயோக ஜ்ஞானயோகங்கள் இதற்கு அங்கங்களாதலால் அவைகளும் அப்ரதானங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அர்த்தத்தை ‘பக்த்யேககோசர:’ என்கிற பதத்தினுள்ள ‘ஏக’ சப்தத்தால் ஆசார்யர்கள் வெளியிட்டார்கள். யோகத்தை உத்தேச்யமாகக்கொண்ட கர்மயோகாநுஷ்டானத்தினால் பாபங்கள் நாசமடைந்து சித்த சுத்தி ஏற்பட்டு ஜ்ஞானயோகத்தை நாடி, யோக முகத்தால் ப்ரத்யகாத்ம ஸாக்ஷாத்கார ஸித்தி வந்தவனுக்குப் பக்தி யோகத்தி லதிகாரம் என்பதை ப்ரதமஷட்கத்தால் ஸ்ரீபகவான் வெளியிட்டார். மத்யம ஷட்கத்தினால் ஸகல ஜகதேக காரணமாயும் தோஷகந்த மற்றதாயும் கல்யாண குணங்களுக்கு ஆதாரமாயுமிருக்கிற பகவானென்கிற ப்ராமாணிக பதார்த்தத்தினுடைய யதார்த்த ரூபாநுபவ ஸித்தியின்பொருட்டு ஜ்ஞானயோகத்தாலும் கர்மயோகத்தாலும் ஸாதிக்கத்தக்க பக்தியோகத்தின் ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்

டது. மூன்றாவது ஷட்கத்தினால் காரணாவஸ்தமான அசித் த்ரவ்யம், அசித்துடன் சேர்ந்திருக்கும் நிலைமையுடையவனும் அசித்துடன் சேராமல் சுத்தாவஸ்தையுடன் கூடியவனுமான புருஷன், மஹத் தத்வம் முதலிய கார்யஜாதம், ஸர்வேசுவரன், இந்தப் பதார்த்தங்களைத் தனித்தனியே பகுத்தறிவதற்கு ஸாதநமாக இருக்கிற தர்மம், கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் முதலியவைகள் நிரூபிக்கப்பட்டன. இந்த விஷயங்கள் ஏற்கெனவே முந்தி கூறப்பட்டிருந்தபோதிலும், இங்கு தெளிவாக அவைகளின் ஸ்வரூபங்களை ஸ்விஸ்தாரமாக சோதிப்பதற்காக மறுபடியும் இந்த ஸந்தர்ப்பத்தில் அவைகள் எடுத்துக் கூறப்பட்டன.

இந்தக் கீதையில் பரமபுருஷனை கண்ணபிரானால் தம்மிடத்திலுள்ள பரத்வம் ஸௌலப்யம் ஸௌசீல்யம் வாத்ஸல்யம் காருண்யம் ஆச்ரித ரக்ஷணம் பக்த பராதீநத்வம் முதலிய உத்தம குணங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஸதாசார்யன் ஸச்சிஷ்யனுக்கு உபதேசிக்க வேண்டிய முறையையும் ஸமயத்தையும் ஸ்ரீகண்ணபிரான் தமது சிஷ்யனாகிய அர்ஜுநனுக்குத் தாமே உபதேசம் செய்திருக்கிற முறையினால் நன்கு வெளியிட்டார். நாஸ்திகர்களும் ஆஸ்திகர்களும் விப்ரதிபத்தியின்றி அங்கீகரித்து அநுஷ்டித்து உய்ய வேண்டிய விஷயங்கள் இந்தக் கீதையில் பற்பல உள. இதில் இரண்டாவது அத்யாயம் பன்னிரண்டாவது சுலோகமாகிய 'நத்வேவாஹம் ஜாது நாஸம்' என்கிற சுலோகம் துடங்கி 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:' என்கிற சுலோகம் வரையில் முற்றிலும் தத்வோபதேச ப்ரகரணம். அஸ்தாநத்திலுண்டான ஸ்நேஹத்தாலும் காருண்யத்தாலும் நிலைதப்பி இருப்பவனும், க்ஷத்ரியர்களுக்கு யுத்தமானது பரம தர்மமாக இருந்தபோதிலும் அதர்மமென்று எண்ணி, தர்மத்தை அறியவேண்டுமென்கிற எண்ணத்தாலே சரணாகதனாகவுமிருக்கிற பார்த்தனைக் குறித்து ஆத்மாக்களுடைய யாதாத்ம்ய ஜ்ஞாநமும் பலத்தில் பற்றுதலின்றிச் செய்யப்படும் யுத்தமானது ஆத்ம ப்ராப்திக்கு உபாயமாகிறது என்கிற ஜ்ஞாநமும் இல்லாவிடில் இவனுக்கு மோஹம் தணியாதென்று எண்ணி, பரமபுருஷனால் அத்யாத்ம சாஸ்த்ரம் உபந்யஸிக்கப்பட்டது. ஜீவாத்மாக்கள் அனைத்தும் ஒன்றென்றும், அவைகள் அநித்யங்களென்றும், பரமாத்ம சைதந்யத்தைக் காட்டிலும் ஜீவ சைதந்யம் வேறுபட்டதல்லவென்றும், ஜந்மாந்தரமில்லை என்றும் சொல்லுகிற பற்பல மதங்கள் அநுபபந்நங்கள் என்பதை 'நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: । ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ।' என்னும் தத்வஸாரஸங்க்ரஹ சுலோகத்தால் பரம புருஷன் தொடக்கத்தில் வெளியிட்டான். ஸ்வதர்மம் எல்லோருக்கும் அவசியம் அநுஷ்டிக்கத் தக்கதென்றும், அநுஷ்டாந காலத்தில் நேரக்கூடிய சிற்சில ஆயாஸங்கள் அவசியம் ஸஹிக்கத் தக்கவை என்றும், ஸ்வதர்மாநுஷ்டாநனம் தேசகாலவைகுண்யத்தால் நன்கு

அநுஷ்டிக்கப்படாமல் போனபோதிலுங்கூட நிச்ரேயஸ ஸாதநமாகு மென்றும் பரதர்மமானது ஸுலபமாக அநுஷ்டிக்கத் தக்கதாக இருந்தபோதிலும் கூட அது விலக்கத்தக்க தென்றும் அநுஷ்டித்தால் அது தீமையையே பயக்கு மென்றும் பரமபுருஷன் கர்ம யோகோபதேச ப்ரகரணத்தில் உபதேசித்தான். நித்ய நைமித்திக காம்ய கர்மங்களுக்குள் ஆத்ம யாதாத்ம்ய நிச்சயத்தை முன்னிட்டு பலஸங்க கர்த்ருத்வங்களை விட்டு அநுஷ்டிக்கப்படும் நித்ய நைமித்திக கர்மாக்களே அபவர்க்க ஸாதநங்களாவதால் சிறந்தவைகளென்றும் தேஹத்தைக் காட்டிலும் வேருக ஆத்மா ஒன்று உண்டென்கிற ஜ்ஞாநத்தை மாத்ரம் முன்னிட்டுப் பல ஸங்காதிகளை த்யஜிக்காமல் செய்யும் காம்ய கர்மாக்கள் பந்தகங்க ளாகின்றனவென்றும் ரஹஸ்யங்களை இரண்டாவது அத்யாயத்தில் 'நாற்பத்தோராவது சுலோகத்தில் பரம க்ருபாநிதியான ஸ்ரீகண்ணபிரான் அநுக்ரஹித்திருக்கிருர். ஸாரதமமான அம்சத்தை க்ரஹிப்பது ஸாத்விக ப்ரக்ருதிகளுக்கு உரித்த தாதலால், அதிகாரி பேதத்தை இலக்காகக் கொண்டு சுருதியில் காட்டப்பட்டிருக்கும் பற்பல வழிகளுக்குள் முமுக்ஷுவாக இருக்கிற உத்தமாதிகாரிக்கு க்ராஹ்யமான அம்சம் பரிமிதமாக இருக்குமென்கிற தத்வத்தையும் ஈசுவரன் அநுக்ரஹித்திருக்கிறுன். ஜ்ஞாந யோகாதிகாரிக்குங்கூட ஆத்ம தர்சந விஷயத்தில் கர்மயோகமே சிறந்ததென்கிற தத்வத்தை ஜநகாதிகளை நிதர்சநமாகக் காட்டிப் பரமபுருஷன் வெளியிட்டான். ஸர்வேசுவரனுகவும் ஸர்வபூதாந்த ராத்மாவாகவு மிருக்கிற பரமாத்மாவினிடத்தில் எல்லாக் கர்மாக்களையும் ஆத்மஸ்வரூப விஷயமான ஜ்ஞாநத்தால் வைத்து அந்தக் கர்ம பலங்களில் ஆசையற்றவனுகவும் 'என்னுடையது' என்கிற அபிமாநமாகிற மமதை யில்லாதவனுகவும் கர்மாக்களை மனிதன் செய்யக்கடவனென்றும், இவ்வாறு பகவதாராதநரூபமாக கர்மாக்களைச் சிரத்தையுடன் அநுஷ்டிப்பது தான் தனக்கு மிக்க ப்ரீதியை உண்டு பண்ணுகிறதென்றும், அவர்கள் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிருர்களென்றும், சிரத்தை இல்லாவிடினும் என்னை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மங்களில் எவர்கள் அஸூயை படுகிருர்களில்லையோ அவர்களும் பாபத்தினின்று விடுபடுகிருர்களென்றும் இப்படிச் செய்வதுதான் தன் மதமென்றும் பரமபுருஷன் “ യെ മെ മതമിദം നിത്യമനുതിഷ്ഠന്തി മാനവാഃ । ശ്രദ്ധാവന്തോഽനസൂയന്തോ മുച്യന്തേ തേഽപി കർമ്മഭിഃ ” என்கிற ச்லோகத்தால் ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிறுன்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீஹெரஜாவ நாயிகாஸமேண தேவநாய வரவஹ்நெ நம:

# "அடியவர்க்கு மெய்யனிடம் ஸ்வாமி தேசிகனின் ஈடுபாடு."

(விழுப்புரம் தாலுகா ஆரியூர். வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்.)

---

மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள் பதின்மரால் மங்களா சாஸநம் செய்யப்பட்ட நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுள், திருவஹீந்த்ர புரம் எழுபத்திரண்டாவது திருப்பதியாக விளங்குவது; 'நாலு கவிப் பெருமாள்' எனும் திருமங்கையாழ்வாரின் மங்களாசாஸநம் பெற்றுத் திகழ்வது. "பௌஷ்கஷா விஹமராஜ விரிஞ்சஜாஷெ:" என்றபடி திருவனந்தாழ்வானும் பூமிப் பிராட்டியாராலும் பெரிய திருவடியாலும் நான்முகனுலும் ஸேவிக்கப் ட்டதாயும், 'பன்மா மாயப்பிறவிபிற் படிந்து' ஸம்ஸார ஸாகரத்திலாழ்ந்து வாழ்நாட்களை வீணை கழித்துத் துன்பமடையும் சேஷபூதர்களைத் தனது பரம க்ருபையினலே உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம்பற்றி 'அயிந்தைமா நகரில் அமர்ந்தனை யெமக்காய்' என்னலாம்படி எழுந்தருளி, யிருக்கும் 'அடியவர்க்கு மெய்யன்' உகந்தருளியதாயுமுள்ள பெருஞ் சிறப்புடையது.

"கலியுகத்தில் எல்லோரும் கொண்டாடத் தகுந்த ஒப்பற்ற ஞான முள்ளவராய், ஹரியினுடைய திருமணியின் அம்சமான முனிவர் ஒருவர், இந்தப் பர்வதத்தில் (ஔஷத கிரியில்) தவஞ் செய்து ஸித்திபடையப் போகின்றார்* என்று, ப்ரும்மாண்ட புராணத்தில், அஹீந்த்ரபுர மாஹாத்ம்யத்தில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறபடியே "அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொருள் நூல் விரித்து, நின்றதன் னீள்புகழ் வேங்கட மாமலை மேவிப் பின்னும், வென்றி புகழ்த் திருவேங்கட நாதனெனுங் குருவாய், நின்று நிகழ்ந்து மண்மே னின்ற நோய்கள் தவிர்ப்ப" தற்காக, ஆசார்யர்களுக்குள் ச்ரேஷ்டதமராய், ஆசார்ய சப்தத்திற்கு முக்கியார்த்தமான 'ஸ்ரீ தேசிகன்' எனும்

---

* கலௌவஷு ஹராநெகொ ஜ்ஷிவகூண்டாம்ஸகொ ஹரே: ।
தவஸ்தி திரள தத்ர ஸிஃம் வராவெ ஹவிஷ்யதி ॥

அஸாதாரணமான திருநாமத்துடன், ஹிமவநம் என்னும் திருத்தண்காவில் அவதரித்தருளிய நிகமாந்த குருவின் பெருமையை முற்றும் யாம் எடுத்துரைக்க முயல்வது 'ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு பூசை முற்றவும் நக்கப் புகுவதை ஒக்கும்.

அத்தகைய அஸாதாரண ச்ரேயஸ்ஸை யுடைய ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பானதும், பெரிய திருவடி நயினாரையும் ஸ்ரீஹயக்ரீவரையும் ப்ரத்யக்ஷீகரித்த திவ்ய ஸ்தலமும், பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை வளர்த்துக்கொண்டு தமது சிஷ்ய வர்க்கங்களுடன் முப்பது ஸம்வத்ஸரங்கள்போல் எழுந்தருளியிருந்ததும் திருவஹீந்திரபுரமேபாம். இந்தத் திவ்ய தேசத்தில் ஸ்வாமி தேசிகன் கொண்டிருந்த ப்ரீதி விசேஷத்தைத் திருவகீந்திரபுரத்தில் இன்றும் விளங்கிவரும் அவரது திருமாளிகையும், அவர் திருக்கரத்தினலேயே கட்டப்பட்ட திருக்கிணறும் ஸூசிப்பித்து நிற்கின்றன. மேலும், திருவேங்கடமுடையானது அவதாரமான ஸ்ரீதேசிகன், மற்றெந்த திவ்ய தேசத்தைக்காட்டிலும் அதிகமானதும் அஸாதாரணமானதுமான ப்ரீதியோடு அயிந்தைமா நகரில் அர்ச்சாவதாரத் திருமேனியோடு ஸாந்நித்யம் செய்திருப்பதனு லல்லவோ, திருமலைக்குப் போவதாக ப்ரார்த்தனை செய்துகொண்டு அசக்தியினல் அங்குப் போகமுடியாத ஜனங்கள், ஸ்ரீ வெங்கடாசலபதி போலவே ஸேவை ஸாதித்துக்கொண்டு அடியவர்க்கு மெய்யனுகி விளங்கும் தேவநாதன் ஸந்நிதியடைந்து ப்ரார்த்தனையை நிறைவேற்றி இஷ்டகாம்யங்களை நாளதுவரை எளிதில் பெற்று வருகின்றார்கள்! அம்மட்டோ! ஸ்வாமி தேசிகன் வெகுகாலம் தவஞ்செய்து ஸ்ரீ ஹயக்ரீவரால் அநுக்ரஹிக்கப்பட்டு முதன்முதலாக எம்பெருமானை மங்களாசாஸனம் செய்யத் தொடங்கியதும் திருவஹீந்த்ரபுரமே யன்றோ? சில்பி ஒருவனை ஜபித்தருளிய காலத்தில் ஸ்வாமி தேசிகனலேயே செய்யப்பட்ட தமது அர்ச்சா விக்ரஹத்தை, தமது விசேஷ அபிமானம் பெற்ற அயிந்தை நகரிலேயே ப்ரதிஷ்டை செய்தருளினர், நமது தேசிகனென்று நம் பெரியோர்கள் அநுஸந்தித்துப் போகுவார்கள். அக்காலத்தில், திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்வாமி தேசிகனுக்கு இருந்த ப்ரீதி விசேஷத்திற் கிணங்க, நாளது வரை ப்ரதி ஸம்வத்ஸரத்திலும் மேற் குறிப்பிட்ட அர்ச்சாவதாரத் திருமேனியோடுள்ள ஸ்ரீ தேசிகன், மற்றெல்லா விடங்களைவிட அயிந்தை நகரிலேயே அதிவிபவமான திவ்யோத்ஸவம் கண்டருளி வருவதொன்றே எமது கூற்றை வலியுறுத்தும். ஸ்ரீஹயக்ரீவரால் அநுக்ரஹிக்கப்பட்ட திவ்ய ஜ்ஞாந பூர்ணராய், அஸாதாரண தேஜஸ்ஸுடன் கூடிய திருமுகத்துடன் ஔஷத கிரியினின்றும் அக்காலத்தில் கீழ் இறங்கிய ஸ்வாமி தேசிகனது அவ்வற்புத ஸேவையை நாளைவரை பிரதி புரட்டாசித் திருவோணத்திலும் திருவஹீந்த்ரபுரத்தில் ஸேவிக்கலாமே!

ஸ்ரீ தேசிகனின் வாழித் திருநாமத்தில், மற்ற ஆழ்வார்களுள் எவரையும் குறிப்பிடாமல் குமுதவல்லி மணவாளரே நமது ஸ்வாமிக்கு அத்யந்த உத்தேசியமானவரென்று நமது பூர்வாசார்யர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள். “கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே” என்பதால், ஆழ்வார்களனைவரையும் தமது அவயவங்களாகக் கொண்ட நம்மாழ்வாருக்குக் கலியன் மிகவும் அந்தரங்க பக்தராக இருந்து வந்தமையாலும், சடகோபரது திருவாய்மொழி முதலிய நான்கு ப்ரபந்தங்களையும் சதுர்வேத ஸாம்யமாகச் செய்து, தமது ப்ரபந்தங்களை அவற்றின் ஆறு அங்கங்களாக அமைத்தமையாலும், திருமங்கைமன்னன் நமது ஸ்வாமிக்கு மிக உத்தேச்யரானார். இதை விளக்க ஒருதாரணம் காட்டுதும்:—

“வையமேழுமுண்டாலிலைவைகிய மாயவன் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகனிடம்” என்று நமது கலியன் திருவயிந்திரபுரத்தை மங்களாசாஸனம் செய்தருளினார். கலியனுரை குடிகொண்ட கருத்துடைய நமது ஸ்வாமியும் அவ்வாறே, ‘அவனிமருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே’ என்றும், ‘அருள்கொடுத்து வினைதவிர்க்கும் அடியவர்க்கு மெய்யனே’ என்றும் தெய்வநாயகனை மங்களாசாஸனம் செய்துள்ளார். அடியவர்க்கு மெய்யன், அச்சுதன் என்னும் திருநாமங்கள் அயிந்தைநகர் அமர்ந்த தெய்வநாயகனுக்கே சிறப்பாக உரிய திருநாமங்களாகத் திகழ்கின்றன.

ஸ்வாமி தேசிகன் மற்றைத் திவ்யதேசத் தெம்பெருமான்கள் விஷயமாக அருளிச்செய்திருக்கும் ஸ்தோத்ராதிகட்கும், அடியவர்க்கு மெய்யன் விஷயமாக அருளிச்செய்திருக்கும் ஸ்தோத்ராதிகட்கும் மிகப்பல வேற்றுமைகளிருக்கின்றன. மற்ற திவ்யதேசத் தெம்பெருமான்களைப் பற்றிய மங்களாசாஸநங்களில் எம்பெருமானுக்குப் பொதுவான குணவிசேஷங்களையே குறிப்பிட்டருளியுள்ளார்; அடியவர்க்கு மெய்யனைப்பற்றிய மங்களாசாஸநங்களிலோவென்றால் அவ்வாறு பொதுவாக மதிக்கத்தக்கனவாயில்லை. “ப்ரத்யங்க பரிணத ஸுஷமா ஸுபகம் வபுஸ்தே த்ருஷ்ட்வா த்ருஶௌ விதருஷாய ந த்ருப்யதோ மே” [ஒவ்வொரு அங்கத்திலும் நிறைந்திருக்கிற காந்தியாலே மநோஜ்ஞமாய் உள்ளதான உம்முடைய சரீரத்தை எனது கண் பார்த்துப் பார்த்து த்ருப்தியடையவேயில்லை] என்று தெய்வநாயகனை நோக்கி நமது ஸ்வாமி ஓரிடத்தில் விண்ணப்பிக்கின்றார். “தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன, தாள்கண்டார் தாளே கண்டார்। தடக்கைகண் டாருமஃதே” என்று கம்பர் பாடியவாறு, அடியவர்க்கு மெய்யனது அவயவங்களுள் ஏதேனும் ஒன்றை உற்று நோக்கிய நமது ஸ்வாமி தேசிகனின் நயனங்கள் அதன் வடிவழகி

லேயே ஈடுபட்டு, தேன் நிறைந்த மலரில் இழிந்த வண்டுகளைப்போலப் பிற வற்றை மறந்து அதிலேயே லயித்துவிடுகின்றன. ஆகவே, அடியவர்க்கு மெய்யனது திவ்யாவயவங்கள் ஒவ்வொன்றும் எல்லையில்லாத அழகு வாய்ந் தனவா யிருத்தலின், ஸ்ரீ தேசிகனின் அநுபவத்திலும் ஒவ்வொன்றின் அழகும் முடிவற்றதாகவே ஆய்விடுகின்றது. இந்நிலையில் அவ்வானந்தானு பவத்தில் த்ருப்திக் கிடமேது?

தெய்வநாயகனது திருக்கரங்களில் திகழும் சங்க சக்ரங்களை வரு ணிக்க வந்தவிடத்தில் ஸ்ரீதேசிகன்,

"நீலாத்ரிசோதித நிசாகர பாஸ்கராபே
சார்ங்காஹிதே சரணவதே தவ சங்க சக்ரே |
வாமேதரஸ்ய பஜதோ அபய முத்ரிகாயா:
வ்யக்தாயதம் ஜகதி பாவயத: ஸ்வபாவம் ||"

[ஹே! தெய்வநாயகனே! இந்திர நீல மலையில் உதித்த சந்திரனையும் சூரியனையும் போன்ற காந்தியுடையவைகளும், விரோதிகளை அழிப்பவை களுமான தேவரீருடைய திருச்சங்கும் திருவாழியும் சரணமடைந்தவர் கட்கு அபய மளிக்கிற இந்த வலத் திருக்கரத்தினுடைய உறுதிமொழியை (அபயப்ரதாநத்தில்) உலகில் தன் பகைவரைக் கொல்லும் தன்மையினால் சொல்லுகின்றன போலும் காட்டுகின்றன] என்று அருளிச் செய்கிறார். எம் பெருமானது திருமேனியை இந்திர நீல மலையாகவும், சங்க சக்ரங்களைச் சந் திர சூர்யர்களாகவும் வர்ணித்திருப்பது பரமானந்தத்தைத் தருவதா யிருக்கி றது. மாசற்ற தூய வெண்மை நிறமா யிருத்தலாலும், குளிர்ச்சி பொருந்தி விளங்குவதாலும், பக்தர்களது இருதயங்கட்குப் பரமானந்த மளிப்பதாலும் திருச் சங்கத்தைச் சந்திரனுக்கும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கும் வெம்மையினா லும், கண்கள் கூசும்படியான பிரகாசத்தை உடையதா யிருப்பதனாலும், உலகு முழுவதும் தனது அதிகாரத்தைச் செலுத்தி வருவதாலும், திருச்சக்ரத்தாழ் வானைச் சூர்யனுக்கும் ஒப்பிட்டு வர்ணித்திருப்பதைச் சிந்திக்குந் தோறும் மனம் ஆனந்தக்கட லாடுகிறது.

அடியவர்க்கு மெய்யனும் தெய்வநாயகனை ஸர்வ கல்யாணகுணங்களும் நிறைந்த உத்தம பர்த்தா வாகவும், தன்னை அவனிடம் மெய்க்காதல் கொண்ட காதலியாகவும் பாவித்து ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்திருப்பனவற்றுள் சிருங்கார ரஸம் நிறைந்து விளங்குகிறது.

" ஸூராஙணஸ் வஞூவித யளவந வாரிஜாத
ஊஹீரயொஷி உநாஙஹூத உஉதஷூ நாயா।
வஂஶெந ஶஂவவதிநாவ நிஷெவிதஂ தெ
ஸிஂஸாயாஂ ஹூரஸதி ஶாமவதீ உதிஷெ ॥ "

[தெய்வநாயகனே! (தனது இயற்கையான) செம்மை நிறத்தால் தளிர்த்தது போலத் தோன்றுகிற இளமைப் பருவமாகிய பாரிஜாதம் போன்றதும், கோபிகைகளால் அநுபவிக்கப்பட்டதும், மூங்கிலாலாகிய குழலாலும் சங்கங்களுக் கெல்லாம் தலைமை பெற்று விளங்கும் பாஞ்சஜந்யத்தாலும் (முறையே கானம் செய்த காலத்திலும், சங்கத் துமானம் செய்த காலத்திலும்) நன்கு அடையப்பட்டதுமான தேவரீருடைய கோவைக் கனியை ஒத்த கீழ் உதட்டை மிக்க ஆசையோடு கூடியதான எனது புத்தியானது நன்றாய்த் தொடுகிறது] என்று, தேவநாயக பஞ்சாசத்தில் நமது ஸ்வாமி அருளிச் செய்திருக்கின்றார். 'ஹூரஸதி ஶாமவதீ உதிஷெ' என்பதால் "வாலியதோர் கனிகொல்? வினையாட்டியேன் வல்வினைகொல்? கோலந்திரள் பவளக் கொழுந் துண்டங்கொலோ? அறியேன்" என்று ஆழ்வார் அனுபவித்தது போல நமது ஸ்வாமி தேசிகனும் நாயகி பாவத்தை அவலம்பித்துத் தெய்வ நாயகனது திருப்பவளச் செவ்வாயை அனுபவித்ததாகத் தெரிகிறது.

"ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்!" என்று விச்வாமித்ரர் விளிக்க நின்ற சக்ரவர்த்தித் திருமகனே போல, அஸாதாரண ஸௌந்தர்ய விசேஷத்தையுடைய அடியவர்க்கு மெய்யனை ஸேவித்த ஸ்வாமி தேசிகன் நாயகி அவஸ்தையை அடைந்து, ப்ரேமை மிகுந்து நின்ற நிலையைத் தாயார் கூற்றாக,

" ஆர்க்குங் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த
கார்க்கொண்டலைக் கண்ட காதற்புனமயில் கண்பனியா
வேர்க்கு முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும் வெள்கி வெவ்வுயிர்க்கும்
பார்க்கின்றவர்க்கிது நாமென் கொலென்று பயிலுவமே "

என்று மும்மணிக்கோவையில் அமைந்திருக்கும் பாசுரம் கவனிக்கத் தக்கது. உண்மையான நிலையை உணரச் சக்தியற்றவர்களால், 'இவளுக்கு என்ன நோய்?' என்று வினவநின்ற தலைவி, தலைவனாகிய தெய்வநாயகனைப் பிரிந்து தளர்வெய்திய காலத்திலும், வேறெவ்வித உபாயாந்தரங்களாலும் தனது துயரை விலக்கிக்கொள்ள விருப்பமின்றி அடியவர்க்கு மெய்யனையே தனது துயரை அகற்றவேண்டி, "உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்ற ஆழ்வாரைப்போல

"இருளு மருளுந் தருமந்நா ளருளா ராழி சங்கேந்தி
அருளுந் தெருளுந் தரவென்பால் அடியோர்மெய்ய! வந்தருளே"

என்றும்,

"ஸூத்ராவஹார ஈவிஷேகந உயெவ உத்த
உநைந்ருயாய உயொநா விஷொயெகநாய ।
ஷ்வீகருத்ய யாஈயிதா உஹஉவி ஊஂ ஸ்வகீயம்
ஜொஈாவநீத நிஜநவிஷொஈவகு ஷ்வாதெ ॥"

[தெய்வநாயகனே! ஆத்மசௌர்யம் செய்வதில் த்ருப்தியுள்ளவனை என்னாலேயே இப்பொழுது ஸமர்ப்பிக்கப்பட்டதாயும், மற்றவர்களாலே அணியத்தகாததாயும், உம்முடைய பொருளுமான என்னை அங்கீகரித்து, தன் திருவடியில், திருடனால் ஸமர்ப்பிக்கப்பட்ட தன்னுடைய பாதச் சிலம்பைப்போல் தரித்துக்கொள்வதற்குத் தகுதியுடையவராகின்றீர்] என்றும் தெய்வநாயகனையே சரணமடைகிறார்.

"வெற்புடனென்றி யயிந்தையில் வெவ்வினைதீர் மருந்தொன்
றற்புதமாக வமர்ந்தமை கேட்டருள் வேண்டிநிற்க
பற்பின் மறந்த செய்யாள் படிகாட்டிய பண்புடையெம்
விற்புருவக் கொடிக்கோர் விலங்கா மயல் பெற்றனமே"

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருப்பது ஆராயத்தக்கது. 'விலக்கா' என்பது 'விலங்கா' என்றாய், அதற்கு எம்பெருமானைத் தவிர மற்றெவராலும் விலக்கமுடியாத மயல் என்றும் பொருள்படும்.

"சேர்வன் சென்றென்னுடைத் தோழிமீர்கள்!
அன்னையர்காளென்னைத் தேற்றவேண்டா
நீர்களுரைக்கின்ற தென்னிதற்கு
நெஞ்சும் நிறையு மெனக்கிங்கில்லை"

என்று ஆழ்வார் அநுஸந்தித்தபடியே, தன்னைத் தேற்றித் தனது துயரை ஆற்ற முயலும் அன்னைமாராலும் தோழிகளாலும் நிவர்த்திக்க முடியாத தனது மயலையே 'விலங்கா மயல்' என்று அருளிச்செய்கிறார் போலும்!

"ஏழ்மைப் பிறப்புக்கும் சேம மிந்நோய்க்கு மீதே மருந்து
ஊழ்மையில் கண்ணபிரான் கழல் வாழ்த்துமி னுன்னித்தே"

என்றும்,

"வினையேன் வினைதீர் மருந்தானாய் விண்ணோர் தலைவா"

என்றும் ஆழ்வார் அருளிச்செய்தபடியே, ஸ்வாமி தேசிகனும் "வெற்புடனொன்றியயிந்தையில் வெவ்வினைதீர் மருந்தொன், றற்புதமாக வமர்ந்தமை" கருதி, "மருத்துவனாய் நின்ற மாமணிவண்ண" னாய தெய்வநாயகனையே ப்ரார்த்தித்து நிற்கிறார் தனது மயலைத் தீர்க்குமாறு.

அடியவர்க்கு மெய்யனை ஒரு நாயகனாகவும், தம்மை ஒரு நாயகியாகவும் பாவித்து, அவனது வடிவழகை அனுபவித்தருளினார் என்கிற அர்த்தம்,

"நதஸத்ய வக்ஷணாநீத மஸிதகிராத ஹூதிஜகூஸார ஸிவநூவ꞉ ।
ஹவிஷ்ய ஷ்யுளவநவயமும் வர ஜவரோம் ருஹஸ்வ ஹஜுிஜந விஜ்ஞாவிதழ ॥"

என்று ஸ்ரீதேசிகனாலேயே, அச்யுத சதகத்தின் கடைசியில் அருளிச்செய்யப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அக்ரந்தத்தின் மற்றோரிடத்தில், திருவைகுந்தத்தில் உண்டாக்கக்கூடிய இன்பமும், இந்த அடியவர்க்கு மெய்யனை அனுபவிப்பதில் தமக்கு உண்டாயிருந்ததனால் அவனது வடிவழகிலேயே ஈடுபட்டு, நலமந்த மில்லதோர் நாடாகிய வீடு பெறுவதிலும், அடியவர்க்கு மெய்யனுடைய இந்த அனுபவமே வேண்டுமென்று ப்ரார்த்தித்து நிற்கிறார்

"ஹஸ்தாஸ்தாவக ஸேவா ரஸஹரிதா ஸ்கரு ரக்ஷிணோர் துஸ்கரஸ்த்யா ।
கூரணாதியாரயஷி திரங்காக்ஷிதஜொக்ஷா கவஷ்ய அத்யதகவ்யா ஷ்ஸர்விதா꞉ ॥"

என்பதால்.

இதுகாறும், சொல்லிவந்தவற்றால் அடியவர்க்கு மெய்யனிடம், ஸ்வாமி தேசிகனின் ஈடுபாடு எத்தகைய அஸாதாரண விசேஷம் பொருந்தியதென்பது இனிது விளங்கும்.

"ஜய விபுதயவதே! த்வம் உபசிததாஹீஷர்ந
ஸ்ஹ ஸரஸிஜவாஸா ஸெதிநீஹ்யாம் வஸாஹ்யாம் ।
நஸுவநஜீவ ஜரூந்நு வாவஸாஸிம் நதாநாம்
மாஹ்ய ஸரிஷநவெ ம்ருஹஸ்தீவ தீவ்யநு ॥"

தெய்வ நாயகன் திருவடிகளே சரணம்.

14

ஸ்ரீ:

# கப்பர் ஸ்ரீவைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்.

[திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.]

(தொடர்ச்சி—ஸம்புடம் 17, 326-ம் பக்கம்)

28. "மண்ணி னின்றுமேன் மலரய னுலகுற வாழும்
எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன விவற்றின்
உண்ணி றைந்துறை காரணத் தினுங்குள வுணர்வும்
எண்ணு கின்றதிவ் வெட்டெழுத் தேபிறி தில்லை."

உயுத்த காண். ஷை படல. செ. 43

29. "முக்கட் டேவனும் நான்முகத் தொருவனு முதலா
மக்கட் காறுமிம் மந்திர மறந்தவர் மறந்தார்
புக்குக் காட்டுவ தரிதிது பொதுவுறக் காண்பார்
ஒக்க நோக்குந ரல்லவ ரதனிலை யுணரார்."

ஷை காண். ஷை படல. செ. 44

30. "...........................................................
...................................................................
எல்லையில் பெருங்குணத் திராமன் தாளிணை
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்."

ஷை காண். வீடணன் அடைக்கலப்படலம் செ. 20.

31. "தேவாதிதேவர் பலராலுனுதி திருநாம மோது செயலால்
மூவாதுநாளு முலகேழொடேழு மரசாளுமேன்மை முதலா
மேவாதவின்ப மவைமேவிமேவி நெடுவீடுகண்டு முடிவார்
..................................................................."

ஷை காண். நாகபாசப்படலம் செ. 250

32. "பார்ப டைத்தவன் படைக்கொரு பூசனை படைத்தீர்
நீர்ப டக்கட வீரவிர் வரிசிலை நெடியோன்

பேர்ப் ணிட்த்தவ ரடியவ ரடியரும் பெறுவர்
வேர்ப டைத்தவெம் பிறவியாற் றுவக்கொணு வீடு"

ஷி காண். பிரமாத்திரப்படலம். செ. 183

33. "பகுதி யென்றுள தியாதினும் பழையது பயந்த
வகுதி யால்வந்த விளைவுமற் றதற்குமே னின்ற
புகுதி யாவர்க்கு மரியவப் புருடனு நீயிம்
மிகுதி யுன்பெரு மாயையி னுல்வந்த வீக்கம்."

34. "முன்பு பின்பிரு புடையெனுங் குணிப்பரு முறைமைத்
தம்பெ ருந்தன்மை தாங்தெரி மறைகளின் தலைகள்
மன்பெ ரும்பர மாற்பமென் றுரைக்கின்ற மாற்றம்
அன்பின் நின்னையல் லான்மற்றிங் கியாரையு மறையா."

35. "எனக்கு மெண்வகை யுருவற்கு மிமையவர்க் கிறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கு முயிருடன் தழீஇய
அனைத்தி னுக்குநீ யேபர மென்பதை யறிந்தார்
வினைத்து வக்குடை வீட்டருந் தளைநின்று மீள்வார்."

36. "ஐயஞ் சாகிய தத்துவங் தெரிந்தறிங் தவற்றின்
மெய்யெஞ் சாவகை மேனின்ற நினக்குமேல் யாதும்
பொய்யெஞ் சாலில தென்னுமி தருமறை புகலும்
வையஞ் சான்றினிச் சான்றுக்குஞ் சான்றிலை வழக்கால்."

37. "தோற்ற மென்பதொன் றுனக்கிலை நின்கணே தோற்றும்
ஆற்றல் சால்முதற் பகுதிமற் றதனுளாம் பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்க ளவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றுற்று வீவுறு நீயென்றும் விளியாய்."

38. "என்னு ருக்கொண்டிவ் வுலகினை யீனுதி யிடையே
உன்னு ருக்கொடு புகுந்துநின் றோம்புதி யுமையோன்
தன்னு ருக்கொடு துடைத்திமற் றிது தனி யருக்கன்
முன்னு ருக்கொடு பகல்செயுந் தாத்தது முதலோய்."

39. "ஓங்கா ரப்பொருள் தேருவோர் தாமுனை யுணர்வோர்
ஓங்கா ரப்பொரு ளென்றுணர்ந் திருவினை யுகுப்போர்

ஓங்கா ரப்பொரு ளாமன்றென் றாழிசென் றூலும்
* ஓங்கா ரப்பொரு ளேபொரு ளென்கலா உரவோர்."

உயுத்த காண். மீட்சிப்படலம். பிரமன்துதி செய்யுள்கள்:—
100, 101, 102, 104, 107, 109, 110.

40. "என்னு மாத்திரத் தேறமர் கடவுளு மிசைத்தான்
உன்னை நீயொன்று முணர்ந்திலை போலுமா லுரவோய்
முன்னை யாதியா மூர்த்திநீ மூவகை யுலகின்
அன்னை சீதையா மாதுநின் மார்பின்வந் தமைந்தாள்."

41. "துறக்குந் தன்மைய எல்லலாற் றெல்லையெவ் வுலகும்
பிறக்கும் பொன்வயிற் றன்னையிப் பெய்வளை பிழைக்கின்
இறக்கும் பல்லுயி ரிறைவநீ யிவள்திறத் திகழ்ச்சி
மறக்குந் தன்மைய தென்றனன் மழுவலான் வழுத்தி."

ஷை காண். ஷை பட. சிவபிரான்துதி செய்யுள்கள்—113, 114.

இவ்விடங்களில் எல்லாம் கம்பர் விஷ்ணு பாரம்மியத்தை விளக்க மாகவும் அருமையாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கின்றார். நமது வியாசம் மிக நீண்டுவிட்டதால் இவற்றின் ஆழ்பொருள்களை இப்போது கூற இயலாமைக்கு வருந்துகின்றோம். இனி எத்தனையோ இடங்களில் ஸ்ரீராம பிரானை, 'என்னையாளுடையவன்,' 'என்னை யாளுடை நாயகன்', 'எந்தை', 'என்னுயிர்த் தலைவன்', 'என்னை யாளப்பன்' என்றும், 'சுந்தரமூர்த்தி', 'தனி மூர்த்தி', 'முதற்பொருள்', 'முழுப்பொருள்', 'மெய்ம்மைப் பொருள்', 'பொருளுக்கும் பொருள்' என்றும், மனமார வாழ்த்தி, நெக்குருகிப் பக்திப் பெருங் கடலில் மூழ்குகின்றார்; ஸ்ரீராமன் தன்னுடைய சொந்த, உயர்ந்த, முழுத் தனிக்கடவுள் என்கிறார்; விஷ்ணுவே 'ஸ்ரீராமன்' என்று நன்றாக மொழி கின்றார்; ஆழ்வார்கள், அப்பனிடத்தில் ஆழங்காற்பட்டு ஈடுபடுவதைப்போல் மெய்ம் மறந்து பக்திச் சுவை ததும்பத் ததும்ப ஈடுபடுகின்றார். இதனை, விராதன், இந்திரன், கவந்தன், வாலி, சீதை, அநுமான், பிரகலாதன், கருடன், பிரமன், சிவன் முதலியோர் வாயிலாக வைத்துக் கூறுமாற்றைக் காண்க. இர

---

* 'ஓங்கா ரப்பொருள் நீயென உணர்குவர் உணர்ந்தோர்' என்று ஓர் ஏட்டுப் பிரதியில் காணப்படுகிறது.

ணியன் வதைப் படலத்துப் பிரகலாதன் துதிகொண்டு கம்பர் ஈடுபட்டமை மஹாநந்தம் பொருந்தியதாய் மிளிர்கின்றது. வேதார்த்தங்களையும், இறை நிலையையும் மிகஅழகாகவும் ஆழமாகவும் இப்படலத்திலே காட்டுகின்றார். கம்பர் செய்விய புலமைத் திறமும், பக்தியும், வைஷ்ணவத்வமும் அறிதற்கு இந்த ஒரு படலமே போதும். இராமாயணம் முழுதுமே அழிந்தாலும், இந்த ஒரு படலம் மட்டில் இருந்தால் போதுமானது. இன்னும் கம்பர், ஸ்ரீராமனுக்குத் 'தன்னலா தொருபொருள் தனக்கு மேலிலான்' என்றும், 'இதுவென்றெண்ண லாவதோர் மூல மில்லான்' என்றும், 'மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள்' என்றும் கொடுத்திருக்கும் அன்பு சுரக்கும் அரிய அடைமொழிப் பிரயோகங்கள் எவ்வளவு அழகியவாய் மிளிர்கின்றன பாருங்கள். ஏதோ இரண்டோர் இடங்களில் உபசாரமாக மேம்படுத்திக் கூறிய சிவன் முதலிய தேவர்களுக்கு, இத்துணைச் சிறந்த நூற்றுக் கணக்கான பிரயோகங்களைக் கம்பர் தம் நூலில் எங்கானும் பெய்திருக்கின்றாரா கவனியுங்கள். இல்லவே இல்லை.

ஆகவே, எத்தனையோ பெயர் எவ்வளவு தான் ஆராய்ச்சி செய்யினும், என்ன தான் சொல்லினும், கம்பர், ஸ்ரீவைஷ்ணவர் ஆகாமற் போகார் என்று கடைப்பிடிக்க. கம்பர் இங்ஙன மெல்லாம், தம் நூலின் இடை இடையே விஷ்ணு பாரம்யத்தைக் கூறிச் சென்று, ஸ்ரீவைஷ்ணவ சமய வெற்றிக் கொடியை நாட்டி, நம்மனோர்க்குப் புதிய உணர்ச்சியைத் தந்து மகிழ்விக்கின்றார். கம்பர், பரதேவதையான ஸ்ரீராமபிரானே தமக்குப் பெருந் தெய்வம் என்று கொண்டு, அத்தேவதையை இடைவிடாமல் மனனம் செய்யும் படிக்கும், அவனது அனந்த திவ்விய குணங்களை அநுபவிக்கும்படிக்கும், அவ்விராமன் கபடநாடக சூத்திரதாரியாய் அமைந்து, ஆங்காங்கு ஒன்று மறியான்போல் கிடந்த வாற்றினைப் பார்த்துப் பார்த்துக் களித்துப் பெரியதோர் இன்பம் எய்தி ஆனந்தம் அடையும்படிக்கும், முத்து மாலையிலே மாணிக்கக் கற்கள் கோத்தால்போல் பாடிய பாடல்கள் பல. அவைதம்மை யெல்லாம் இங்கெடுத் துரைக்கப் போதிய இடம் இல்லை. கம்ப ராமாயணத்தைப் பல தடவையும் ஆழ்ந்து ஆழ்ந்து படித்துப் பயின்றால்தான், அவ்வுணர்ச்சியும் அதனால் உண்டாகும் சுவையும் பிறக்கும். இரண்டோர் இடங்களைக் குறிப்பிடுவதனால் மட்டில் ஆவ தொன்று மில்லை. ஒவ்வொருவரும், அவர் செய்திருக்கும் வேலைத் திறத்தை ஆழ்ந்து அறிந்தால்தான் அனைத்தும் தெரியவரும்.

# ஸ்ரீ. வை. ஸி. ஸபை உபந்யாஸங்கள்.

## (1) நெல்லூரில் ஆதரவு.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ப்ரவசநத்தை முன்னிட்டு நெல்லூரில் சென்ற அக்டோபர் 9, 10-ந் தேதிகளில் ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி ஸந்நிதியில் வித்வான் உ. வே. குடவாசல் நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் இரண்டு உபந்யாஸங்கள் நடத்தப்பட்டன. நெல்லூர் ஜில்லா ஜட்ஜும், ஸபையின் உப அத்யக்ஷர்களில் ஒருவருமான ஸ்ரீ.உ.வே. வி. பாஷ்யம் ஐயங்கார் ஸ்வாமி இரண்டு திநங்களிலும் அக்ராஸநம் வகித்து உபந்யாஸங்களை நடத்திவைத்தனர். ஸ்தலத்தில் தமிழ் பாஷா பரிசயமுள்ளவர்கள் பஹுவாக இல்லா விட்டாலும் ஏராளமான ஸ்வாமிகள் உபந்யாஸங்களைக் கேட்க வந்திருந்தனர்.

முதல் திநம் ஸாயங்காலம் அர்ச்சாவதாரத்தைப் பற்றியும், இரண்டாவது திநம் ஸாயங்காலம் உபநிஷத்துக்களைப் பற்றியும் ஸ்ரீ. உ. வே. குடவாசல் ஸ்வாமி தெளிவாகவும் அழகாகவும் உபந்யஸித்தார். முதல் உபந்யாஸத்தில் ச்ரிய: பதியின் பர வ்யூக விபவாவதாரங்களின் தத்துவங்களையும், அவற்றைக் காட்டிலும் அர்ச்சாவதாரத்திற்கு ஏற்பட்டுள்ள எற்றத்தையும் எடுத்துக் காட்டி அர்ச்சாவதாரத்தில் மஹாஜ்ஞாநிகளான ஆழ்வார்கள் பெற்றுள்ள அநுபவத்தையும் பரக்கக் கூறினர். இரண்டாவது உபந்யாஸத்தில் சாந்தோக்யம், ப்ருஹதாரண்யகம், தைத்திரீயம் முதலிய உபநிஷத்துக்களிலிருந்து பல உபாக்யாநங்கள் மூலம் ஜீவஸ்வரூபம், பரமாத்ம ஸ்வரூபம் முதலிய தத்வங்களைத் தெளிவு படுத்தினர்.

ஸ்ரீ.உ. வே. அக்ராஸநாதிபதி ஸ்வாமி முடிவுரையாகச் செய்த உபந்யாஸத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் சரித்ரத்தையும், அது முதலில் ஸ்ரீ அஹோபிலமடத்து சிஷ்யஸபையாக விருந்து பிறகு ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் பொதுவாக ஒரு ஸபையாக மாறி ஸித்தாந்தப்ரவசநமாகிய பகவத்கைங்கரியத்தை நடத்திவருவதையும் விஸ்தாரமாகக் கூறி, ஸர்வ லோகத்திற்கும் ஹிதத்தை உண்டு பண்ணுவதான இந்த ஸம்ப்ரதாயம் ஓங்குமாறு ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களும் ச்ரம மெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஸ்ரீ. வை. ஸி. ஸபையை ஆதரிக்க வேண்டுமென்றும் ஸாதித்தார். வேதாந்த தீபிகையைப் போல் தெலுங்கில் ஒரு மாத ஸஞ்சிகையை ஸபையார் நடத்தவேண்டுமென்று ஸ்தல மகாஜனங்கள் ஆஸ்தைப்படுவதாகவும், ஸபையின் நிர்வாஹிகள் இதில் ச்ரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அந்த ஸ்வாமி முடிவில் ப்ரஸ்தாவித்தார்.

அக்ராஸநாதிபதி ஸ்வாமி, ஸபை விஷயத்தில் க்ருபையுடன் விசேஷ ச்ரத்தை எடுத்துக்கொண்டு உபந்யாஸங்களை நடத்தி வைத்தும், மற்றும் அந்த ஊர் ஸ்வாமிகள் விசேஷமாக ஆதரிக்குமாறு செய்ததற்காக ஸபை கார்யதர்சி ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மா சார்யர் க்ருதஜ்ஞதாவிஷ்கரணஞ் செய்துகொண்டு, தெலுங்கு ஸஞ்சிகை நடத்துவது ஸம்பந்தமாக நிர்வாஹிகள் பரிசீலனை செய்வார்களென்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார். இத்துடன் உபந்யாஸங்கள் முடிந்து ஸ்வாமிகள் எல்லோரும் பகவத் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸநஞ் செய்தனர். தீர்த்த ப்ரஸாதம் விநி யோகிக்கப்பட்டுக் கூட்டம் பிறகு கலைந்தது.

ஸ்தலத்திலேயே ஸபையில் 25 அங்கத்தினர்கள் சேர்ந்தனர். இவ்விஷயமாக நெல்லூர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமி, வக்கீல் கே. வி. ராகவாசார்ய ஸ்வாமி, வக்கீல் கே. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி இவர்கள் எடுத்துக்கொண்ட ச்ரமம் மிகப் பாராட்டத்தகுந்தது.

---

## (2) க்ரந்த முத்ரணம்.

சென்ற பதினேரு ஸஞ்சிகைகளாக ஸ்ரீ வேதாந்த தீபிகையாகிற நமது பத்ரி கையில், ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம், ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையால் அநுக்ரஹீதமாயுள்ள வ்யாக்யானத்துடன் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வந்தது. இந்த ஸஞ்சிகையுடன் அது முடிவுபெறுகின்றது. அதன் ஸ்தாநத்தில், "ஜிதந்தே" என்று உபக்ரமிக்கும் ஸ்ரீ பக வத் ஸ்தோத்ரம் அடுத்த ஸஞ்சிகை முதல் ப்ரசுரிக்கப்படும். அதற்கு ஸ்ரீ. உப. வித் வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஒரு வ்யாக்யாநம் ஸாதிப்பதாகத் திரு வுள்ளம் பற்றி யிருக்கிறார். நமது அபிமாநிகளெல்லாரும் அதை ஆதரித்து, அதன் குணங்களை ஆநந்தத்துடன் அநுபவிக்கும்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிக்க வேணு மென்று நாம் ப்ரார்த்திக்கிறோம். முதல் "ஜிதந்தே" ஸ்தோத்ரத்திற்கு ஸ்ரீ பெரியவாச் சான்பிள்ளை ஒரு வ்யாக்யாநம் அநுக்ரஹித்திருக்கிறார். அதுவும் ப்ரசுரிக்கப்படும்.

ஐப்பசி மீ 7உ

கார்யதர்சி,
ஸ்ரீ வை. வி. ஸபை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

---

யோऽந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஸக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரண ஸ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

---

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸ்ரீ. வை. ஸி. ஸபை.**

"ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை" என்று வ்யவஹரிக்கப்பட்டு வரும் நமது ஸபையும், அதன் பத்ரிகையாக இருக்கும் "ஸ்ரீ வேதாந்த தீபிகை" என்னும் மாஸாந்தர ஸஞ்சிகையும் ஏற்படுத்தப் பட்டு இப்பொழுது பதினேழு வர்ஷங்கள் ஆகின்றன. என்ன உத்தேசத்தைக்கொண்டு இந்த ஸபை ஏற்படுத் தப்பட்ட தென்றும், இந்தப் பதினேழு வர்ஷ காலமாக இது நடைபெற்று வருவதால் ஜநங்களுக்கு என்ன ஆநுகூல்யம் ஜநித்திருக் கின்ற தென்றும், ஆதி ப்ரவர்த்தகர்களால் உத்தேசிக்கப்பட்ட பலங்களுள் எவை எவ்வளவு கை கூடி வந்திருக்கின்றனவென்றும், கை கூடி வராமல் ஏதாவது ஒரு அம்சம் இருக்கும் பக்ஷத்தில் அதை ஸாதித்துக் கொள் வதற்கு ஸபையார் எவ்விதமான சீர்திருத்தத்தைச் செய்யவேண்டு மென் றும், இத்யாதியான விஷயங்களைப் பராமர்சிக்க இப்பொழுது ப்ராப்த மாகின்றது.

ஆரம்பத்தில் "ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை" என்னும் பெயருடன் இந்த ஸபை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஸபா ப்ரவர்த்தகர்களின் நோக்கங்கள், கேவலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம் ஹன் ஸந்நிதியின் விபூதிகளுடைய அபிவ்ருத்தியைத் தேடுவதற்கு மாத் ரம் ஸங்குசிதங்களாக இராமல், ஜநஸாமாந்யத்திற்கு ஆத்யந்திக ச்ரே யஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கும் உபாயங்களைத் தேடுவதிலேயே ப்ரவ்ருத் தங்களாக இருந்தன. வேதத்திற் சொல்லப்பட்டுள்ள ஸநாதந தர்

மங்களேயும், அந்த வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களா யுள்ள இதிஹாஸ புராணங்களில் காணப்படும் கதாரூபமான தர்மங்களேயும், நமது பரமாசார்யரா்யும் லோகஹிதத்திற் கென்றே இவ்விடத்தில் வந்து அவதரித்தவராயு முள்ள ஸ்ரீ பகவத் பாஷ்யகாரர் விவரித்திருக்கிறபடி தமிழ் பாஷையில் விவரித்து, அதன் மூலமாக ஜனங்களுக்கு நன்னடத்தையைப் போதிப்பித்து, அவர்களே இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ச்ரேயஸ்ஸை அடையும்படி செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய முக்ய கருத்தாக இருந்தது. பிறகு இந்த ஸபை "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை" என்று மாறுதல் அடைந்தபொழுதும், அந்த நோக்கங்களே ப்ரதாநங்களாகக் கைப்பற்றப் பட்டு வந்தன. இந்த நோக்கங்களே ஸாதித்துக்கொள்ளும் பொருட்டு ஸபா ப்ரவர்த்தகர்கள் இந்தப் பதினேழு வர்ஷ காலமாக அநேக உபாயங்களேப் பஹுமுகமாக அநுஷ்டித்து வருகிருர்கள். பண்டித ப்ரவரர்களேக் கொண்டு ஆங்காங்கு உபந்யாஸங்களேச் செய்விப்பதும், ஒவ்வொரு வர்ஷம் முடிவிலும் வித்வத் ஸதஸ்ஸையும் ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தையும் கூட்டுவதும், தீபிகையில் தத்வார்த்தம் முதலிய விஷயங்களின் விசாரத்தைச் செய்வதும் அவர்களாற் செய்யப்பட்டுவரும் உபாயங்களுள் முக்யமானவை. இவைகளின் அநுஷ்டாநங்களில் அநேக அம்சங்களில் லோபமும், மற்றும் அநேக அம்சங்களில் அநுசிதமான ஆதிக்யமும், இன்னும் இம்மாதிரியான வேறு தோஷங்களும் ஸம்பவித்திருக்கக் கூடும். ஆனுல், அவைகளெல்லாம் அல்பங்களாகவும் ஆஸ்திகர்களால் பொறுத்துக்கொள்ளக் கூடியவைகளாகவுமே இருந்திருக்கின்றன வென்றே நாம் நினேக்கிருேம். மிதஜ்ஞர்களாகவும் மிதமான சக்தியை உடையவர்களாகவு மிருக்கும் மநுஷ்யர்களுடைய அநுஷ்டாநங்களில் ஸ்கலநங்கள் ஸம்பாவிதங்களே.

சென்ற பதினேழு வர்ஷ காலமாக இந்த ஸபையின் ப்ரவ்ருத்தியால் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநுகூல பாகங்களேப் பராமர்சிக்கும்பொழுதும் நாம் எவ்வித நிர்வேதப்படுவதற்கும் காரணமில்லையென்றே புலப்படுகின்றது. அபண்டிதர்களான ஸாமாந்ய ஜனங்களுக்கு இது உபகாரகமாக இருந்திருக்கின்றது என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். தத்வஜ்ஞானத்தை ஸாக்ஷாத்தாக உணர்த்துவதற்கு இது அபர்யாப்தமாக இருந்தபோதிலும், ஆமுஷ்மிக விஷயங்களில் அபிருசியை ஜநிப்பித்து, பரம்பரையாக இது அவர்களுக்கு ச்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுத்திருக்கின்றது என்பதில் ஆக்ஷேபமில்லே. பண்டிதர்கள் விஷயத்தில் கூட இது ஒருவாறு உபகரித்தே இருக்கின்றது. ஏற்கெனவே அவர்களால் அறியப்பட்டாமல் இருந்த அம்சங்கள் ஒன்றையும் இது புதிதாக அவர்களுக்குப் போதிக்கவில்லே என்பது உண்மையே யானுலும், பால்யத்தில் அவர்களால் அப்யஸிக்கப்பட்ட வித்யை

யைப் பரிஷ்கரித்துக் கொள்வதற்கும், அதை மஹா ஜனங்களுக்கு உபகாரக மாகும்படிச் செய்வதற்கும் இது பலமான ஹேதுவாக இருந்திருக்கின்றது. இவை யெல்லாம் அல்பமான ப்ரயோஜனங்கள் என்பது உண்மையே. ஆனல், ஸபா ப்ரவர்த்தகர்கள் இந்த வ்யாபாரத்தை ஏற்றுக்கொண்டபொழுது எவ்வித ப்ரயோஜனத்தையும் கவனியாமலே இதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். அந்தரங்கத்தில் தோன்றின ஒரு பகவந் நியமநமே அவர்களுடைய ப்ரவ்ருத்திக்கு முக்ய காரணமாக இருந்தது. அப்படிச் செய்யப் படும் ப்ரவ்ருத்திகள் வேறு ஒரு ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்க மாட்டா வன்றோ? நாம் செய்வது ஸத்கார்யமாக இருந்தால் அதுவே பரம ப்ரயோ ஜனமாக வேண்டும். ஆகையால், நமக்குத் தென்படும் ப்ரயோஜனங்கள் அல் பங்களாக இருந்த போதிலும் 'பகவந் முகோல்லாஸம் இதனல் ஏற்படுகின் றது' என்று அறிந்திருக்கும் ஸபையோர்கள் எவ்வித நிர்வேதத்தையும் அடைவதற்குக் காரணமில்லை.

இவ்விதம் ஸபையாற் செய்யப்படும் கார்யங்கள் பெரும்பாலும் த்ருப்தி கரமாக இருக்கையிலும், இம்மாதிரியான ஸபைகளாலேயே நடத்தப்பட வேண்டிய வேறு சில நடவடிக்கைகள் நடத்தப்படாமல் அநாதரிக்கப்பட்டு வருகின்றன வென்றும், அந்த நடவடிக்கைகளை இந்த ஸபையார் செய்யா மல் இருக்கும் வரையில் அவர்கள் தமது தர்மத்தைப் பூர்ணமாகச் செய்த வராகமாட்டார் என்றும் நமக்கு ஒரு அதிசங்கை ஜனிக்கின்றது.

கேவலம் தத்வஜ்ஞாநத்தை விளக்குவதும் அதற்கு அபேக்ஷிதமான ஸாதநங்களை மாத்ரம் தேடுவதும் இக்காலத்திற்குப் போதுமான ப்ரவ்ருத்தி யாகமாட்டா. தர்மங்களுக்கு மிகுந்த க்லாநி நேர்ந்திருக்கிறபடியால் அந் தத் தர்மங்களை ஸ்தாபித்துக்கொள்ள நாம் யதாசக்தி ப்ரவ்ருத்திக்க வேண் டியது அவச்யமென்று நாம் நினைக்கிறோம். ஜகத் முழுவதும் தர்மத்திலேயே ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றது. அந்தத் தர்மம் தளர்ச்சியை அடைந்தால் எவ்விதத்தில் ஜகத்துக்கு ஸ்திதி ஏற்படும்? தவிரவும், மிக்க ஊக்கத்துடன் நீண்டகாலம் தர்மங்களைச் சரிவர அநுஷ்டித்து வருவதனலேயே ஜ்ஞாநம் நிலைபெறுகின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறர்கள். அவ்விதம் ஜ்ஞாந பரிபாகத்திற்கு மூல காரணமாயுள்ள தர்மாநுஷ்டாநம் மலிநமாகி வந் தால் அதை நாம் அநாதரித்துப் போசலாமோ? ஜ்ஞாந பரிபாகம் நமது ச்ரே

யஸ்ஸுக்கு அவச்யம் அபேக்ஷித மன்றோ? பூர்வ காலத்தில் நமது தேசத்தை அலங்கரித்து வந்த மஹான்களுடைய சமதமாதி ஸம்பத்துக்களுள் ஒரு அம்சமாவது இக்காலத்தில் எங்கேயாவது தென்படுகின்றதா? துஷ்டியும், க்ஷாந்தியும், ஆர்ஜ்ஜவமும், ஆஸ்திக்யமும் எவ்விடத்திலோ ஒளிந்து போய்விட்டன போலத்தோன்றுகின்றதே! அர்த்தலாபம் கிடைக்குமானால், பொய்பேசுவதும் மோசம் செய்வதும் தர்ம்யங்களாகவே நினைக்கப்படுகின்றன. அஸாதுக்களுடைய ஸங்கத்தின் பலமாகவோ, அவர்களுடைய உபதேசத்தின் பலமாகவோ, நமது பாலர்களுடைய சித்த வ்ருத்தியும் மாறி வருகின்றது.

"யேநாபத்ரபதே ஸாதூ ஸாதுஸ்தேந துஷ்யதி"

என்கிறபடி, லஜ்ஜைப்படுவதற்குக் காரணமாயுள்ள க்ருத்யங்களில் அவர்கள் மிகுந்த ஸந்தோஷத்தையே அடைகின்றார்கள். இம்மாதிரியான சித்த வ்ருத்தி ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு ஹேதுவாகுமோ? இந்த ஆபத்தைத் தடுக்க முயல்வது இம்மாதிரியான ஸபைகளின் முக்யமான தர்மமன்றோ? இந்த விஷயத்தை நமது ஸபா ப்ரவர்த்தகர்கள் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம். கரை புரண்டு வரும் காட்டாற்றின் ப்ரவாஹம் போல் பயங்கரமாக இருக்கும் இந்தத் துர்தசையைப் பூர்ணமாகத் தடுப்பது அஸாத்யமேயாயினும், நாம் தகுந்தபடி முயற்சி செய்தால், சிற்சில பாகங்களிலாவது நாம் நமது வைதிக ஸ்ரீயை ஸம்ரக்ஷித்துக் கொள்ளக்கூடும் என்னும் நம்பிக்கை இருக்கிறபடியால் நாம் இம்மாதிரி ப்ரார்த்திக்கத் துணிந்தோம்.

* * *

**தேவாலயங்களின் நிந்தை.**

சென்ற இரண்டொரு மாஸ காலமாக, 'மஹாத்மா காந்தி' என்னும் நமது ஹிந்து ஆஸ்திகர், தென் இந்தியாவில் யாத்ரை செய்துகொண்டு, பற்பல விடங்களில் ஜனங்களுக்கு நன்னடத்தையைப் போதிப்பித்து வருகிறார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இரண்டொரு இடங்களில், அவர், நமது தேவாலயங்களைப் பற்றி நிந்தித்துப் பேசினதாக நாம் கேள்விப்படுகிறோம். அப்படி அவர் நிந்தித்துப் பேசியிருந்தால் அது மிகவும் சோசநீயமே. நாம் அவரைப் பெரிய ஆஸ்திக ஹிந்து வென்று க்ரஹித்திருக்கிறோம். அநேக உத்தமங்களான ஆத்ம குணங்கள் அவரிடம்

குடிகொண்டிருக்கின்றன. நமது தேசத்திய மஹாராஜநங்களாலும் அவர் மிகுதியும் கௌரவிக்கப்பட்டு வருகின்றார். அப்படிப்பட்ட பெரியவர், ஹிந்துக்களெல்லாராலும் பரம பக்தியுடனும் ச்ரத்தையுடனும் விசேஷித்துக் கொண்டாடப்பட்டுவரும் தேவாலயங்களைத் தூஷித்தாரென்றால், அது நம்பத் தகுந்ததாகவே நமக்குத் தோன்றவில்லை. நமது ஆலயங்களில் சிற்சில தோஷங்கள் இருக்கக்கூடும். அவ்விடங்களில் நடைபெற்றுவரும் உத்ஸவாதிக ளெல்லாம் ஸகல அம்சங்களிலும் சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கிற படியே நடைபெற்று வருகின்றனவென்று நாம் சொல்லத் துணியோம். ஆனால், அம்மாதிரியான சில தோஷங்கள் இருப்பது காரணமாக, “இந்தத் தேவாலயங்களெல்லாம் குலடைகள் வஸிக்கும் இடம்” என்றும், “அவ்விடத்தில் தேவதா ஸாந்நித்யமே இல்லை” என்றும், அவரைப் போன்ற மஹாந் சொல்லக்கூடுமோ? அத்யந்தம் அநபிஜ்ஞர்களாகவும், கேவலம் தோஷைகத்ருஷ்டிகளாகவும், ஸ்வார்த்தபரர்களாகவும், அநார்ஜ்ஜவம் அசுத்தம் முதலியவைகளால் நிறைந்தவர்களாகவும் இருக்கும் தேசாந்தரீய ஸ்த்ரைணமும் ஸ்த்ரீ ப்ராயராயிருக்கும் மற்றை அவிவேகிகளும் நமது மதத்தையும் ஆசாரத்தையும் இம்மாதிரி தூஷித்தால் அதை ஒருவாறு பொறுத்துக்கொள்ளலாம், இவரைப் போன்ற பெரியோர்களும், அந்த ஸ்த்ரைணத்தைப் போலவே தூஷணங்களில் ப்ரவ்ருத்திக்க ஆரம்பித்தால், அதை நாம் எவ்விதத்தில் ஸஹிக்கக்கூடும்? இவரைக்காட்டிலும் பல மடங்கு சிறந்த ஆத்மகுண பூர்த்தியை உடைய மஹாந்கள் இந்த ஆலயங்களைப் பார்த்ததில்லையோ? அவர்கள் காலத்தில், இப்பொழுது தென்படும் தோஷங்கள் இந்தத் தேவாலயங்களில் இல்லாமல் இருந்தனவா? தமக்குத் தென்பட்ட தோஷங்களை அவர்கள் யதாசக்தி நிவ்ருத்திப்பிக்க முயன்றார்களே தவிர, இம்மாதிரி தூஷிக்கவாவது ஸந்நிதிகளைப் பரித்யஜிக்கவாவது முயன்றார்களில்லை. அம்மாதிரி நடையன்றோ இவருக்கும் உபபந்நமாக இருத்தல் வேண்டும்? ஸாஹஸமாக எவ்வித நிந்தையையும் செய்யத்துணியாத இவர், ப்ராக்ருத விஷயத்தில் எவ்வித ஆலோசனையையும் செய்யாமல் நிந்திக்க ப்ரவ்ருத்தித்தாரே என்பது தான் நம்மை வருத்துகின்றது. இது யாருடைய தௌர்பாக்யமோ அறிகிலோம்.